**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)
**HG30 – நிலை 3 – (Grade 3)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Offline Examination)
**நவம்பர் – டிசம்பர் 2018**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பிரிவு – 1**

**I எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
***Answer all questions in a word / line.*** **(10x1 = 10)**

1. மரங்கள் எவ்வாறு இறைவனைப் போற்றும்?
2. உலகத்தில் அழியாமல் நிற்பது யாது?
3. சிறுபஞ்ச மூலம் எத்தனை வெண்பாக்களைக் கொண்டது?
4. சிலம்பு என்பது என்ன?
5. காளமேகப் புலவர் எதில் வல்லவர்?
6. மூன்று ஆறுகள் கூடும் இடம் எவ்வாறு அழைக்கப்பெறுகிறது?
7. பாரதிதாசனின் இயற்பெயர் என்ன?
8. மக்களின் வாழ்நிலையைத் தீர்மானிப்பது எது?
9. விடை எத்தனை வகைப்பெறும்?
10. நான்காம் வேற்றுமையின் உருபு யாது?

**பிரிவு – 2**

**II எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
***Answer any ten questions in three lines each.*** **(10x2=20)**

1. தமிழ்மொழியின் சிறப்பில் ஒன்றினைக் கூறுக.
2. தக்கார், தகவிலார் என்பது எதனால் காணப்படும்?
3. ஐம்பெருங் காப்பியங்களுள் இரண்டின் பெயர்களைத் தருக.
4. பிளந்த பனங்கிழங்கு எதற்கு உவமையாகக் கூறப் பெற்றுள்ளது?
5. முக்கூடலில் சேறும் மூன்று ஆறுகள் யாவை?
6. தன்னைப் பணிந்தவர்களுக்கு "மூன்றாம் நந்திவர்மன்" எதைக் கொடுத்தான்?
7. எவ்வித உறுதி வேண்டும் எனச் சாலை. இளந்திரையன் கூறுகிறார்?
8. வேலிபோடுவதன் நோக்கம் யாது?
9. தம்பி அழுதக் கண்ணீர் ஆறு எவ்வாறு பாய்ந்தோடியது?
10. தேவாரத்தை இயற்றியவர்கள் யாவர்?
11. வான ஊர்திகளின் வகைகள் யாவை?

12. மணி போன்ற மாணவர்களை எப்படி உருவாக்க வேண்டும்?
13. நிகழ்காலம் காட்டும் இடைநிலைகள் யாவை?
14. ஆகுபெயரின் வகைகளைக் கூறுக.
15. இயல்பு புணர்ச்சி என்பது யாது?

## பிரிவு – 3

**III எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளில் விடை தருக.**

***Answer any five questions in six sentences each.*** **(5x4=20)**

1. இறைவாழ்த்துப் பாடலின் கருத்துகளாக வேதநாயகம் பிள்ளை கூறுவனவற்றை தொகுத்து எழுதுக.
2. "அழகுகள் ஐந்து" பற்றி சிறுபஞ்ச மூலம் கூறும் கருத்துகளை எழுதுக.
3. நாரை விடு தூதுப் பாடலின் கருத்துகளை எழுதுக.
4. பெண்கல்வி பற்றி பாரதிதாசன் கூறும் கருத்துகளை எழுதுக.
5. 'தோடுடைய செவியன்' எனத் தொடங்கும் தேவாரப் பாடலின் கருத்தை எழுதுக.
6. பதினெட்டாம் பெருக்கு – குறிப்பு வரைக.
7. அறுவகைப் பெயர்களின் வகைகளைச் சான்று காட்டி விளக்குக.
8. வஞ்ச புகழ்ச்சி அணியைச் சான்று காட்டி விளக்குக.

## பிரிவு – 4

**IV ஏதேனும் ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில் விடை தருக.**

***Answer any one of the following questions in fifteen sentences*****.** **(1x10=10)**

1. "நடுவு நிலைமை" பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
2. குற்றால அருவிகளின் அழகுகளைப் பற்றி தொகுத்து எழுதுக.
3. அறுவகை வினாக்களைச் சான்று காட்டி விளக்குக.

## பிரிவு – 5

**V ஏதேனும் ஒன்றனுக்கு மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.**

***Write an essay in three pages to any one of the questions.*** **(1x15=15)**

1. 'வான ஊர்தி' – பாடப்பகுதியில் உள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
2. இளையவன் இவனா? நாடகத்தின் வழி கருத்துகளைத் தொகுத்து எழுதுக.